**செய்தி வெளியீடு எண்:728** **நாள்: 01.11.2017**

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

## “உலக உணவு இந்தியா 2017”

மத்திய அரசின் உணவுபதப்படுத்தும் தொழில்களின்அமைச்சகம் **“உலக உணவு இந்தியா 2017”** என்னும் சர்வதேச நிகழ்வினை புதுடில்லியில் 03.11.2017 முதல் 05.11.2017 வரை நடைபெறவுள்ளது. இதன் மூலம் இந்திய உணவுபதப்படுத்தும் துறைகளில் முதலீடு மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், இந்தியா உணவுப் பொருளாதாரத்திற்கு நுழைவாயிலாகவும், வெளிப்படுத்தவும், இணைக்கவும், ஒத்துழைக்கவும் வாய்ப்பு அளிக்கிறது.

முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்கள், உணவு பதப்படுத்துவோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் உலகளாவிய உணவு சுற்றுச்சூழல் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து அதிக அளவில் உலக உணவு இந்தியா 2017ல் பங்கு பெற உள்ளனர்.

இந்தியாவை உலக உணவு வரைபடத்தில் ஒரு சிறந்த இடத்திற்கு கொண்டு செல்லும். மாநாடுகள், கண்காட்சிகள், துறையின் குறிப்பிட்ட கருத்தரங்குகள், மத்திய மற்றும் மாநில அமர்வுகள், B2B & B2G கூட்டமர்வுகள், இந்தியாவிற்கும் சர்வதேச வணிகங்களுக்கும் இடையே இணைக்கவும் மற்றும் ஒத்துழைப்புக்கான துடிப்பான தளத்தை வழங்குவதற்கான இந்த மூன்று நாள் நிகழ்வு நடைபெற உள்ளது.

இம் மூன்று நாட்களில் நடைபெற உள்ள 9 கருத்தரங்குகளில் 2000க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள், 400க்கும் மேலான காட்சியமைப்பாளர்கள், 20க்கும் மேற்பட்ட நாடுகள், 26 மாநிலங்கள், 50 உலக தலைமைச் செயல் அலுவலர்கள் ஆகியோர் பங்கு கொண்டு தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழக உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தோட்டக்கலைத் துறை போன்ற அரசு துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம், மீன்வள பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பொருட்கள் காட்சியமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் வலிமை மற்றும் வாய்ப்புகளை அனைவரும் அறியும் வண்ணம் அமைக்கப்படும். விவசாயிகள் மற்றும் முன்னோடி உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்ற மாநில தொழில் முனைவோருடனான கலந்துரையாடல் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு முகமைத்துறையாக உள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறது.

நவம்பர் 4 அன்று மாலை 5 மணிக்கு ஹால் எண் 4, விக்யான் பவனில் **தமிழ்நாடு மாநில அமர்வு** நடைபெற உள்ளது.

இந்நிகழ்வினை மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் நவம்பர் 3, 2017 அன்று துவக்கிவைக்க உள்ளார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு இரா. துரைக்கண்ணு அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சார்பாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**